1973 நவம்பர் 22]

அமோக விளைச்சல் தரும் சப்போட்டா ரகம்

*319 வினு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தின் மூலம் அதிக விளைச்சல் தரும் சப்போட்டா பழ ரகம் ஏதேனும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) ஆம். கோ 1 என்ற சப்போட்டா வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை 360 ஒட்டுச் செடிகள் பயிரிட வழங்கப்பட்டுள்ளன. மரம் ஒன்றுக்கு சராசரி 40 கிலோ மகசூல் கிடைக்கும். இவ்வகை சப்போட்டா மரங்கள் நோயினுலும் பூச்சிகளாலும் பாதிக்கப்படுவதில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இப்படி ஆராய்ச்சி செய்து கண்டுள்ள சப்போட்டா மரங்கள் வெளி மாநிலங்களுக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டனவா ? நம் மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் அது பயிரிடப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : வெளி மாநிலங்களுக்கு அனுப்பத்தக்க அளவிற்கு இங்கு தயாராகவில்லை. ஆகவே வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதில்லை என்று நான் கருதுகிறேன். எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு மரங்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரம் என் கைவசம் இப்போது இல்லை.

மதுரை மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கம்

*320 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில், உருளைக்கிழங்கு சாகுபடி செய்வதற்கென விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், 1972–73-ல் எவ்வளவு ஏக்கரில் உருளைக்கிழங்கு சாகுபடி மேற்கொள்ளப்பட்டது ?